2011 ஆகஸ்ட் 19] [திரு. கே.பி. முனுசாமி]

(21) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறு புதிய திட்டங்களை ஊரகப் பகுதிகளில் செயல்படுத்த ஆணையிட்டுள்ளது. இப்பணிகளைத் தரமாகவும், உரிய காலத்திலும் நிறைவேற்றிட கள ஆய்வுப் பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, மாவட்டங்களிலுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பழைய வாகனங்களுக்குப் பதிலாக 100 புதிய வாகனங்கள் இந்த ஆண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 5.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

(22) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள இணை இயக்குநர், உதவி இயக்குநர், வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், உதவியாளர், இளநிலை உதவியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், பணிப் பார்வையாளர், இளநிலை வரைவாளர் மற்றும் சாலை ஆய்வாளர் ஆகிய பணியிடங்களில் 6,124 பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இப்பணியிடங்களை நிரப்பிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

(23) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக அலுவலகத்தை நவீனப்படுத்துதல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கணினி வசதி செய்தல், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு வாகனங்கள் மற்றும் இதர வசதி செய்தல், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் உதவி இயக்குநர் நிலையில் 7 அலுவலர்களுக்குப் புதிய வாகனம் வழங்குதல் ஆகிய பணிகள் பகுதி II திட்டத்தின்கீழ் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும். மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி மற்றும் இதர வசதிகளைக் கொண்ட புதிய கட்டடம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டு கட்டப்படும்.

(24) திருநங்கைகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக இதுவரை எந்தச் சிறப்புக் கவனமும் செலுத்தப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 19

திருநங்கைகள் நல மேம்பாட்டிற்காகத் தனிக் கவனம் செலுத்தி திருநங்கைகளைக் கொண்டு 100 சுய உதவிக் குழுக்கள் இந்த நிதியாண்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் அவர்களுக்குத் தேவையான பயிற்சி, சுழல் நிதி மற்றும் கடன் உதவி வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த இவ்வரசு வழிவகை செய்யும்.

(25) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தகுதி வாய்ந்த திருநங்கை சுய உதவிக் குழுக்களுக்கு 2.5 சதவீத மானியத்துடன் ரூபாய் 1.5 இலட்சம் வரை தொழிற்கடன் வழங்கப்படும். இக்கடன் உதவியின்மூலம் திருநங்கைகள் தங்கள் வாழ்க்கையில் உயரவும் பொருளாதார மேம்பாடு அடையவும் வழிவகுக்கப்படும்.

(26) மகளிர் திட்டத்தின் துவக்கத்திலிருந்து இதுவரை சுய உதவிக் குழுக்களுக்கு 11,603 கோடி ரூபாய் கடனாக வங்கிகள்மூலம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 2011–2012 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின்மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு 4,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உதவியின்மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார மேம்பாடு அடைவதற்கு வழிவகை செய்யப்படும். சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவைகளைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் தேவையான உதவிகள் வழங்க முன்னுரிமை அளிக்கப்படும்.

பிற்பகல் 12–0.5

(27) ஏழைப் பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், இதுவரை சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படாத பகுதிகளிலும் மற்றும் குறைவான எண்ணிக்கையில் உள்ள பகுதிகளிலும் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும். இந்த நிதியாண்டில் 65,000 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ளவர்கள் மற்றும் நலிவுற்ற பிரிவினருக்காகச் சிறப்புக் கவனம் செலுத்தி மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.